திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, இந்த நிலைமையிலே சோளிங்கரிலே இருக்கின்ற வீடு கட்ட கடன் வழங்கும் சங்கம் கடந்த ஆண்டு எத்தனை பேர்களுக்குக் கடன் வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் தற்சமயம் என்னிடத்திலே இல்லை.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, தற்சமயம் அதிகமாகக் கடன் வழங்க முடியாத நிலைமையில் அந்தச் சங்கம் இருக்கிறது என்று சொன்னாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற அந்தச் சங்கத்தோடு செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்கள்—அங்கே உள்ள நிர்வாகிகளுக்குத் தேவையான ஊர் என்ற காரணத்தினாலே—சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் கடன் வழங்குகிற முறையிலே அந்த ஜூரிஸ்டிக்ஷனிலே சேர்த்து இருப்பதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறண்டு கிடக்கும் கிணறுகள்.

*வினா எண் 803—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறண்டு கிடக்கும் பம்பு செட்டு கிணறுகளை ஆழ்கிணறு, குழாய் இறவை திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை ஏதேனும் அரசு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விடை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அது முற்றிலும் உண்மை. ஏனென்றால் இந்தக் கேள்வி விவசாய அமைச்சர் அல்லது சட்ட அமைச்சருக்குத்தான் வர வேண்டும். ஆனால் தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்குப் போட்டுவிட்டதால் இல்லை என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே, இந்தக் கேள்வியை மாற்றியமைத்தால் எனக்குப் பதில் நல்ல முறையில் கிடைக்கும்.

1981 எப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குடிநீர் சம்பந்தப் பட்ட கேள்வி ; விவசாயத்திலே வராது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்த வறட்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட நிதியில் ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதி சேராத காரணத்தால், அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்குச் சிரமப்பட்டுக் கொண் டிருப்பதால் ஆழ் கிணறுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்படி தொகுதியிலே வறண்டு கிடக்கும் திறந்த வெளிக் கிணறுகளுக்குப் பதிலாக ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்து செயற்குறிப்பு ஏதும் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் சம்பந்தப்பட்ட ஊராட்சி யினரிடமிருந்து முன் வைப்புத் தொகை திட்டத்தின் கீழ் மேற் கூறிய பகுதிகளில் வறண்டு போன திறந்தவெளிக் கிணறுகளுக்குப் பதில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் படி வாரியத்திடம் தொகை செலுத்த முன் வந்தால் இது குறித்து குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்யும்.

இந்திய மருந்து விற்பனையாளர்கள் சங்கம் அரசிடம் அளித்துள்ள கோரிக்கை.

*வினா எண் 804— திரு. கே. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மருந்து விற்பனை மற்றும் பல பொருட்களின் விற்பனை ஏஜண்டுகளை தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் என்று நிர்ணயிக்கும் திருத்தத்தைக் கொண்டு வர அரசுக்கு உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர உள்ளது ?

(இ) இது குறித்து இந்திய மருந்து விற்பனையாளர்களின் சங்கம் அரசுக்குக் கோரிக்கை சமர்ப்பித்துள்ளதா ?